தினமணி

## கரும்புப் புழுக்களை கட்டுப்படுத்துவது எப்படி?

First Published : 23 Sep 2010 12:00:00 AM IST

Last Updated :



பூச்சி தாக்கிய கரும்பு வயல்.

புதுச்சேரி: கரும்பு மகசூல் பாதிக்காமல் இருக்க இடைக்கணு, நுனிக் குருத்துப் புழுக்களை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவி வரும் தட்பவெப்பநிலை காரணமாக சமீபத்தில் நடவு செய்துள்ள கரும்பு பயிர்களில் இடைக்கணு புழுக்கள் மற்றும் நுனி குருத்துப் புழுக்கள் காணப்படுகின்றன. பொதுவாக தட்பவெப்ப நிலையில் அதிகமாக உஷ்ணம் தென்படும்போது கரும்பில் நுனி குருத்துப் புழுக்கள் அதிகமாக வரும். இவை கரும்பு நுனி குருத்துப் பகுதியைக் கடித்து உண்பதால் நுனி குருத்தானது கருகியது போல தோற்றமளிக்கும். இப்படி இருப்பது நுனி குருத்துப் புழு இருப்பதற்கான அறிகுறி.

இடைக்கணு புழு என்பது இரண்டு கணுக்களுக்கு இடையில் துவாரம் இட்டு அந்த துவாரத்தின் வழியாக இடைக்கணு புழுக்கள் உள்ளே நுழைந்து கரும்பின் தண்டு பாகத்தை சேதப்படுத்துகிறது. இந்த இரண்டு புழுக்கள் காரணமாக மகசூல் பாதிக்கும். மேலும் சர்க்கரையின் அளவும் குறைய வாய்ப்புள்ளது. கரும்பு பயிர் மேலாண்மை குறித்து புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என்.விஜயகுமார் கூறியது:

பொதுவாக இடைக்கணு புழுக்கள் கரும்பு நடவு செய்த ஒரு மாதத்தில் இருந்து 90 நாள்கள் வரை அதிகமாகக் காணப்படும். 90 நாளில் இருந்து 120 நாள் வரை வளர்ந்த கரும்பு பயிரில் நுனி குருத்துப் புழுக்கள் காணப்படும்.

இதை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் தகுந்த நடவடிக்கை எடுத்தால் கட்டுப்படுத்தலாம். இதனால் கரும்பின் மகசூல் குறையாமல் இருக்க வாய்ப்புண்டு.

நுனி குருத்துப் புழு தாக்கிய கரும்பு பயிரை அப்புறப்படுத்தி வெளியில் போட்டு எரித்துவிட வேண்டும்.

நுனி குருத்துப் புழு வந்த வயலில் ஓர் ஏக்கருக்கு 6 சிசி டிரைகோகிராமா ஜப்பானிகா ஒட்டுண்ணி அட்டைகள் கட்ட வேண்டும். இடைக்கணு புழு வந்த வயலில் உடனடியாக சோலையை உறிக்க வேண்டும். பின்னர் டிரைகோகிராமா கைலோனிஸ் என்ற ஒட்டுண்ணி அட்டைகளை ஓர் ஏக்கருக்கு 6 சிசி வீதம் கட்ட வேண்டும். இந்த இரண்டு ஒட்டுண்ணி அட்டைகளில் இருந்து வெளிவரும் குளவிகள், நுனி குருத்துப்புழு மற்றும் இடைக்கணு புழுக்களைத் தேடிக் கண்டுபிடித்து வயலில் அழித்துவிடும். இந்த ஒட்டுண்ணி அட்டைகள் புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய உயிரியல் ஆய்வகத்தில் கிடைக்கும்.

இந்த அட்டைகளை 15 நாள் இடைவெளியில் 180 நாள் வரையில் வயலில் கட்ட வேண்டும். இது மட்டுமன்றி நீர் பாய்ச்சுவதற்கு முன்பு ஓர் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு கரும்பின் அடிப்பாகத்தில் போட்டு நீர் பாய்ச்ச வேண்டும். கரும்பின் வயது குறைவாக இருந்தால் கால் மடிக்கும்போது வேப்பம் பிண்ணாக்கை அந்த மண்ணுடன் சேர்த்து கால் மடிக்கலாம். இவ்வாறு செய்வதால் வேப்பம்பிண்ணாக்கு கசப்புத் தன்மை காரணமாக இந்தக் இடைக்கணு புழு மற்றும் நுனி குருத்துப் புழுக்கள் அதைவிட்டு வேறு இடம் ஓடும்.

தாக்குதல் அதிகமாக இருந்தால் மோனா புரோட்டாபாஸ் 36 டபுள்யூ எஸ்.சி. என்ற பூச்சிக்கொல்லி மருத்தை ஓர் ஏக்கருக்கு 600 மி.லி. அல்லது புரபனோபாஸ் (கியூராகிரான்) என்ற பூச்சி மருத்தை ஓர் ஏக்கருக்கு 500 மி.லி. தெளிக்கலாம். கரும்புக்குக் கட்டுப்படுத்தி நீர் வைக்க வேண்டும். அதிகமாகவும் நீர் இருக்கக் கூடாது. குறைவாகவும் இருக்கக் கூடாது.

**"விதைப் பரிசோதனை அவசியத் தேவை'**

First Published : 23 Sep 2010 12:00:00 AM IST



விதைகளின் தன்மைகள் குறித்து ஆய்வு செய்கிறார் வேளாண்மை அலுவலர் ஆனந்தி ராதிகா.

காஞ்சிபுரம்: விதைப் பரிசோதனை செய்து சாகுபடி செய்வதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம் என விவசாய துறையினர் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் விவசாயம் செய்யும்போது பயிரிடப்படும் விதைகளில் 80 சதவீதம் முளைக்கும் திறன் இருந்தால்தான் அதிக விளைச்சல் கிடைக்கும். ஆனால் சில விவசாயிகள் 50 சதவீத முளைக்கும்

திறன் உள்ள விதைகளையே பயன்படுத்துகின்றனர். இதனால் விளைச்சல் பாதிக்கப்பட்டு நஷ்டம் அடைகின்றனர்.

விவசாயிகள் கூடுதல் லாபம் பெறுவதற்கு 80 சதவீத முளைப்புத் திறன் உள்ள விதைகளை கொண்டு பயிர் செய்ய வேண்டும். இதுபோன்ற விதைகளை அடையாளம் காணத்தான் இப்போது விதை பரிசோதனை நிலையங்கள் உள்ளன. சான்று பெற்ற விதைகளை வாங்கி பயிரிட வேண்டும். தங்களிடம் உள்ள விதைகளை விதை ஆய்வு நிறுவனத்தில் ஆய்வு செய்து பின்னர் பயிரிட வேண்டும்.

காஞ்சிபுரத்தில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் அருகிலேயே விதைப் பரிசோதனை நிலையம் அமைந்துள்ளது.

இது குறித்து காஞ்சிபுரம் வேளாண்மை அலுவலர் ஆனந்தி ராதிகா கூறும்போது, விதைகளை ஆய்வு செய்ய வெறும் | 30 மட்டுமே செலவாகும். விதைகளை ஆய்வு செய்யும்போது நான்கு விதங்களில் தரம் பிரித்து கொடுக்கிறோம். 80 சதவீத முளைப்புத் திறன் உள்ள விதைகளைப் பயன்படுத்துவதால் அதிக விளைச்சல் கிடைக்கும். விவசாயிகளுக்கு விதைகளும் கூடுதலாக தேவைப்படாது. எந்த விதையாக இருந்தாலும் 15 தினங்களுக்குள் பரிசோதித்து பரிசோதனை முடிவுகளை அளித்து விடுவோம் என்றார்.

விதைப் பரிசோதனை அலுவலர் இனியன் கூறும்போது, "விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையோ, அல்லது தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்தோ விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும். அப்போது அவர்களுக்கு கூடுதல் மகசூல் மற்றும் லாபம் கிடைக்கும் என்றார்.

**விவசாயிகளுக்கு வழிகாட்டும் தீவனப் பயிர் சாகுபடி பண்ணை**

First Published : 23 Sep 2010 12:00:00 AM IST



சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் கிராமத்தில் முன்னோடி விவசாயி சீனுவாசப் பெருமாள் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய விரிவாக்க பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள

சிதம்பரம்: கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே சி.முட்லூர் கிராமத்தில் கால்நடை தீவனப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இச் சாகுபடி முறையை விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் நேரடியாக கண்டு விளக்கம் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பில் தீவன விலைஉயர்வு ஒரு மிகப்பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் பாலின் விலையில் 40 சதவீதம் வரை தீவனத்துக்கு செலவிடப்படுகிறது.
மேலும் பாலின் கொள்முதல் விலை தொடர்ச்சியாக மாநில அரசு மற்றும் தனியார் பால் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளதால் விவசாயிகளுக்கு லாபம் வெகுவாக குறைந்துள்ளது. இத்தகைய சூழலில் விவசாயிகளின் பொருளாதார நலன்கள் மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக கிராமப்புற வேளாண் விரிவாக்கப் பணி வாயிலாக கால்நடை தீவன அறிமுகம் மற்றும் விரிவாக்க ஆராய்ச்சிப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் பகுதியில் முன்னோடி விவசாயி சீனுவாசப் பெருமாளின் தோட்டத்தில் உழவியல் துறை உதவிப் பேராசிரியர் வினோத்குமார் மற்றும் வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தலைமையிலான வல்லுநர் குழு பரிந்துரையின் பேரில் செயல்முறை விளக்கம் மற்றும் ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.
அங்கு தீவனப் பயிர்களான, கொள்ளு ரகங்கள் அஓ-52, யஐஎ-19, யகஎ-15, டஏஎ-9 போன்றவை சாகுபடி செய்யப்பட்டன. மேலும் ஜோத்பூரிலிருந்து கொண்டு வரப்பட்ட பிற தீவனப்பயிர் ரகங்களான ய-585, எஇ-3(இ), இஞயம-702, ய-240, தஎஇ-986 போன்றவை ஆராய்ச்சிப் பண்ணையில் வளர்க்கப்பட்டு வெற்றிகரமாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
இப் பயிர்கள் கால்நடைகளின் தீவனத் தேவையை நிறைவு செய்வதுடன் மண்ணின் வளத்தை இயற்கை முறையில் பெருக்கி காற்றில் உள்ள தழைச்சத்தை தங்களின் வேர் முடிச்சுகள் வாயிலாக கிடைக்கச் செய்ய உதவுகிறது. மேலும் மண்ணின் வளம், நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பெருகி அடுத்த பருவத்தில் விவசாயிகளின் உற்பத்தி திறன் இயற்கை முறையில் பெற உதவுகிறது.
சி.முட்லூர் போன்ற கடல் சார்ந்த வேளாண் பகுதிகளில் வேளாண் கழிவுகள், வைக்கோல் மற்றும் புதிய தீவனப் பயிர்கள் கலவை, பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே கால்நடை பாதுகாப்பு, மண்ணின் வளம் பெருக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உதவும் இந்த புதிய தீவனப்பயிர் விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி செயல்முறை விளக்கப் பண்ணையை, சிதம்பரம் அருகே கிள்ளை செல்லும் சாலையில் சி.முட்லூர் கிராமத்துக்கு சென்று நேரடியாக பார்த்து பயன் பெறலாம்.

**அணை நீர்மட்டம்**

First Published : 22 Sep 2010 09:22:17 AM IST

கேஆர்எஸ் அணை நீர்மட்டம்:
மொத்த உயரம்: 124.80 அடி
செவ்வாய்க்கிழமை நீர்மட்டம்: 117.59 அடி
அணைக்கு நீர்வரத்து: 4,355 கன அடி
வெளியேற்றப்படும் நீர்: 5,560 கன அடி.

**கபினி அணை நீர்மட்டம்:**

மொத்த உயரம்: 2,284 அடி

(கடல்மட்ட அளவு)

செவ்வாய்க்கிழமை நீர்மட்டம்:

2278.89 அடி

அணைக்கு நீர்வரத்து: 2,015 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 1,400 கனஅடி

**வேளாண் பயிலரங்கு**

First Published : 22 Sep 2010 12:57:28 PM IST

ஆலங்குடி, செப். 21: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாணவிகளுக்கான வேளாண் பயிலரங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவிகள் பங்கேற்ற இந்தப் பயிலரங்குக்கு, வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப. சின்னையன் தலைமை வகித்தார். முனைவர்கள் செ.க. நடபராஜன், ஆர். சுரேஷ், ச. கவிதா, சு. குருநாதன், அ. மாணிக்கவள்ளி உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் ஆசிரியர் பயிற்சி மைய முதல்வர் வி. கருப்பையா, விரிவுரையாளர்கள் வி.மணிமுத்து, எஸ். வாசுகி, பாண்டியராஜன், செப்மியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை: ஆட்சியர் எச்சரிக்கை**

First Published : 22 Sep 2010 01:14:36 PM IST

திருவாரூர், செப். 21: உரங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் எச்சரித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பகுதியில் உள்ள உர விற்பனை கடைகளில் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

திருவாரூர் மாவட்டத்தில் நிகழ் சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 1.44 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான யூரியா 12,100 மெட்ரிக் டன், டி.ஏ.பி. 4,500 டன், பொட்டாஷ் 2,300 டன், கலப்பு உரம் 2,700 டன் தேவையென கணக்கிடப்பட்டு தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தேவையான உரங்கள் வரவழைக்கப்பட்டு வருகிறது. இந்த உரங்களை அனைத்துத் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் சில்லரை முறையிலும் விற்பனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு கூடுதலாகத் தேவைப்படும் உரங்களை பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் உரங்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களிலும் பெற்றுப் பயன்படுத்த வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து உரக் கடைகளிலும் சிறப்பு பறக்கும் படை மூலம் செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளில் தடை செய்யப்பட்ட பூச்சி மருந்து விற்பனை செய்யப்பட்டாலோ, உரங்களுக்கு அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலைகளைவிட கூடுதல் விலையில் விற்பனை செய்யப்பட்டாலோ தொடர்புடைய உர விற்பனை நிலையங்களில் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும்.

மேலும், அத்தகைய உர விற்பனை நிலையங்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும். எனவே, பொதுமக்கள் உரம் தொடர்பான தேவைகள் மற்றும் பிரச்னைகளுக்கு தொடர்புடைய வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை அணுகலாம். மேலும் விவரங்கள் அறிய வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) செல்பேசி: 97509 63314 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

ஆய்வின் போது வேளாண் இணை இயக்குநர் சொ. அன்பழகன், உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) த. நடேசன், வட்டாட்சியர் தேன்மொழி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**காய்கறி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,22:36 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் பகுதியில் உழவர் சந்தை மேம்பாட்டு குழு சார்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. விருத்தாசலம் உழவர் சந்தை சிறப்பாக செயல் படுவதற்காக உழவர் சந்தை மேம்பாட்டு குழு சார்பில் கிராமப் புறங்களில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டமும், நகர் புறங்களில் நுகர் வோர்களுக்கான கூட்டமும் நடத்தப்படுகிறது. அதன்படி கம்மாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த பெருந்துறை, குப்பநத்தம் கிராமங்களில் விவசாயிகளுக்கு நடந்த விழிப்புணர்வு கூட்டத்திற்கு வேளாண்மை அலுவலர் அமுதா தலைமை தாங்கினார். உழவர் சந்தை நிர்வாக அலுவலர் நந்தினி முன்னிலை வகித்தார். காய்கறி பயிரிடும் விவசாயிகள் நேரடியாக எவ்வித இடைத் தரகர்கள் இல்லாமல் உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பது

குறித்தும், சாகுபடி மற்றும் அறுவடைக்கான தொழில் நுட்பங்கள், எள், மணிலா, உளுந்து பயிர்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. உதவி வேளாண் அலுவலர்கள் அருள்பிரகாசம், அறிவழகன், ஜெயபால், சிவக்குமார், ராஜாராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு சிறப்பான எதிர்காலம் உண்டு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,21:39 IST

விழுப்புரம் : விவசாயிகளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளதை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென டி.ஆர்.ஓ., வெங்கடாசலம் பேசினார். விழுப்புரம் அருகே உள்ள கண்டமானடியில் மனு நீதி நாள் முகாம் நடந்தது. ஊராட்சித் தலைவர் தயாளீஸ்வரி நெடுஞ் செழியன் தலைமை தாங்கினார். தாசில்தார் சேதுராமன் வரவேற்றார். கவுன்சிலர் மோகனா முருகன், அரியலூர் ஊராட்சித் தலைவர் தனலட்சுமி, டி. ஆர்.ஓ., முத்துசாமி, பி.டி. ஓ., சதாசிவம், தனிதாசில் தார்கள் லலிதா, மனோகரன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் டி.ஆர்.ஓ., வெங்கடாசலம் மக்களிடமிருந்து குறைகள் குறித்த 182 மனுக்களைப் பெற்று பேசியதாவது: நாளுக்கு நாள் விவசாய நிலங்களின் பரப்புகள் குறைந்து வருவதால், விவசாயமும் குறைந்துள்ளது. இதனால் வருங்காலத்தில் விவசாய பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதோடு விவசாயிகளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. விவசாயிகள் வேளாண் சார்ந்த அரசின் திட்டங் களை பயன்படுத்தி பரவலாக பயிரிட வேண்டும். இங்கு துறை சார்ந்த அதிகாரிகளே நேரில் வந் துள்ளதால், குறைகளை நீங்கள் நேரில் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். உங்கள் குறைகள் குறித்த மனுக்கள் மீது 15 நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மனு நீதி நாளிற்கு முன் னதாகவே மனுக்களை கொடுக்க வேண்டும், அப் படி கொடுத்திருந்தால் அதனை பரிசீலித்து மனு நீதி நாள் கூட்டத்திலேயே நிவர்த்தி செய்து கொடுத்திருப்பார்கள். பட்டா மாற் றம் குறித்த மனுவில் உரிய மூலப் பத்திரங்களின் நகல் களை இணைத்து கொடுத் திடுங்கள், அப்போது தான் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும். மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களிடம் கூறுங்கள் ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும். நலத்திட்டங்களுக் காக தவறான தகவல்களை கொடுக்க கூடாது. இவ்வாறு டி.ஆர்.ஓ., வெங்கடாசலம் பேசினார்.
பள்ளி தலைமை ஆசிரியர் சீத்தாராமன், மின்வாரிய உதவி பொறியாளர் ரவீந்திரன், கூட்டுறவு வங்கி செயலர் சந்திரன், வருவாய் ஆய்வாளர் குணசேகரன், நிலஅளவை ஆய்வாளர் குமார், நடராஜன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 16 பேருக்கு இலவச மனைப் பட்டா, சலவைப் பெட்டி, தையல் மெஷின் உள் ளிட்ட நலத் திட்ட உதவி கள் வழங்கப் பட்டது. வி.ஏ.ஓ., துரை நன்றி கூறினார்.

**தோட்டக்கலை துறை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு சம்பங்கி பூ விதை வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:51 IST

விழுப்புரம் : கோலியனூர் தோட்டக் கலை துறை மூலம் விவசாயிகளுக்கு சம்பங்கி பூ விதைகள் 50 சதவீதம் மான்ய விலையில் வழங் கப்பட்டது. விழுப்புரம் அடுத்த பிடாகம் கிராமத்தில் சம்பங்கி பூ விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கும் விழா நடந்தது. தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர்செல் வம் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் சம்பங்கி பூ விதைகள் வழங்கினார். இதில் விராட்டிக்குப் பம், நல்லரசன் பேட்டை, சகாதேவன் பேட்டை, பனங்குப்பம் மற்றும் பிடாகம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் வழங்கப் பட்டது.

கோலியனூர் தோட்டக் கலை உதவி இயக்குனர் வீராசாமி, தோட் டக்கலை உதவி அலுவலர் ரமேஷ், விவசாய சங்க பிரதிநிதிகள் தண்டபாணி, மனோகரன், சக்கரவர்த்தி, அம்சா, முருகன், அன் பழகன், அரிகிருஷ் ணன், ராஜசிம்மன் கலந்து கொண்டனர். உதவி இயக்குனர் ரமேஷ் நன்றி கூறினார்.

**பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் லாபம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,02:50 IST

அரூர்: ""மஞ்சள் மற்றும் கரும்பு சாகுபடியில் கிடைக்கும் வருமானத்தை விட பட்டு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது,'' என, தமிழக பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் பிரபாகரன் தெரிவித்தார். அரூர் அடுத்த சித்தேரி, மோப்பிரிப்பட்டி, கம்பைநல்லூர் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள் அதிகளவில் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். தமிழக பட்டு வளர்ச்சித்துறை இயக்குனர் பிரபாகரன் நேற்று முன்தினம் அரூர் பகுதியில் பட்டு விவசாயிகள் பயிரிட்டுள்ள மல்பரி செடிகள், பட்டுபுழு வளர்ப்பு மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, விவசாயிகளிடம் அவர் கலந்துரையாடி அவர்களுடைய குறைகளை கேட்டறிந்தார். பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பரி சாகுபடியில் பட்டு வளர்ச்சித்துறை அறிமுகப்படுத்தி உள்ள புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு அவர் எடுத்துரைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: பட்டு உற்பத்தியை பொறுத்தவரையில் உள்நாட்டு தேவைக்கு தற்போது பெரும் பற்றாக்குறை உள்ளது. பட்டு பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் வகையில் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பட்டு உற்பத்தியை பெருக்கும் வகையில்

விவசாயிகளை அதிகளவில் பட்டுபுழு வளர்ப்பில் ஈடுபட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சிதுறை சார்பில் துரித நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் உள்ள விவசாயிகள் பட்டுபுழு வளர்ப்பு புதிய தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும்.

விவசாயிகள் ஒரு ஏக்கர் மல்பரி நடவு செய்து பட்டுபுழு வளர்த்தால் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை நிகர வருமானம் கிடைக்கும். அரசு சார்பில் மல்பரி நடவுக்கு ஊக்க தொகையாக பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. மஞ்சள் மற்றும் கரும்பு சாகுபடியில் கிடைக்கும் வருவாயை விட பட்டு உற்பத்தியில் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது. புழு வளர்ப்புக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை செய்ய சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. வங்கிகளில் கடனுதவி கிடைக்க வழிகாட்டுதல் செய்யப்படும். பட்டு விவசாயிகளுக்கு தேவையான நவீன தொழில் நுட்ப பயிற்சி மற்றும் உதவி தொகைகள் வழங்கப்படுகிறது. பாப்பிரெட்டிப்பட்டி, தர்மபுரி, நல்லம்பள்ளி, அரூர் ஆகிய இடங்களில் தொழில் நுட்ப சேவை மையங்கள் உள்ளன. பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகள் சந்தேகங்கள் மற்றும் மானிய உதவிகள் குறித்து தொழில்நுட்ப சேவை மையங்களை அணுகி கேட்டு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார். ஆய்வின் போது தர்மபுரி மற்றும் அரூர் பகுதி பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள், ஊழியர்கள் உடன் இருந்தனர்.

**பட்டு உற்பத்தியை பெருக்க மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,02:53 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு பட்டுவளர்ச்சி துறை மூலம் மானிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் கோலப்பாபிள்ளை வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தியை பெருக்க பட்டுவளர்ச்சி துறை மூலம் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கரில் மல்பரி நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு மானிய தொகையாக 4,125 ரூபாயும், அதிகபட்சம் 2.50 ஏக்கரில் மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு 10 ஆயிரத்து 312 ரூபாயும் மானியமாக வழங்கப்படுகிறது.

பட்டு விவசாயிகள் பட்டுப்புழு வளர்க்க புழு வளர்ப்பு மனை அமைத்தால் தரமான பட்டு உற்பத்தி செய்ய முடியும். இதற்காக விவசாயிகளுக்கு பட்டுபுழு மனை அமைக்க அரசு தற்போது மானியம் வழங்குகிறது.1,500 சதுர அடிக்கு மேல் புழு வளர்ப்பு மனை அமைத்தால் மானிய தொகையாக 75 ஆயிரம் ரூபாயும், 1,000 சதுர அடிக்கு மேல் அமைத்தால் 50 ஆயிரம் ரூபாயும், 700 சதுர அடிக்கு மேல் அமைத்தால் 25 ஆயிரம் ரூபாயும் மானியமாக வழங்கப்படுகிறது. பட்டு விவசாயிகள் 1,200

சதுர அடியில் புழு வளர்ப்பு தாங்கிகள் அமைத்தால் 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன புழு வளர்ப்பு தடவாளங்கள் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைத்தால் 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

அதிகபட்சமாக 2.50 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைத்தால் 37 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மகளிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வரை பட்டு தொழிலில் ஈடுபடும் மகளிருக்கு காப்பீடு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. தற்போது, ஒரு கிலோ மஞ்சள் பட்டுக் கூடுகள் 200 ரூபாயில் இருந்து 250 ரூபாய் வரையிலும், வெள்ளை பட்டுக்கூடுகள் 250 ரூபாயில் இருந்து 340 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக மல்பரி நடவு செய்வதற்கான தட்ப வெப்ப நிலை மற்றும் மழை சாதகமாக உள்ளதால் விவசாயிகள் மல்பரி பயிரிட்டு அதிக பயன் பெறலாம்.

### கோழி வளர்ப்பு தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க வலியுறுத்தல்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,02:57 IST

கிருஷ்ணகிரி: "கோழி வளர்ப்போருக்கு தனியாக நலவாரியம் அமைக்க வேண்டும்' என தமிழக கறிக்கோழி வளர்ப்பு சங்க மாவட்ட பொது குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிருஷ்ணகிரியில் தமிழக கறிக்கோழி வளர்ப்பு சங்க மாவட்ட பொதுக்குழு கூட்டம் தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் லோகாபிராம் தலைமையில் நடந்தது. கறிக்கோழி வளர்ப்பு சங்க தலைவர் சிவராஜ் முன்னிலை வகித்தார். செயலாளர் ரூபேஸ் வரவேற்றார். விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் ராமகவுண்டர் கோரிக்கைகள் குறித்து பேசினார்.

"கறிக்கோழி வளர்ப்பு செலவை ஈடுகட்ட கம்பெனி நிர்வாகம் பண்ணையாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் வழங்க வேண்டும். தரமான கோழிக்குஞ்சுகளை மட்டுமே பண்ணையாளர்களுக்கு வழங்க வேண்டும். கோழி வளர்ப்பு தொழிலில் வருமான வரி பிடித்தம் செய்யக்கூடாது. கோழிகளுக்கு குடிதண்ணீர் விவசாய பம்பு செட்டுகளில் இருந்து எடுப்பதற்கு தடை செய்யக்கூடாது. கோழி வளர்போருக்கு தனியாக நலவாரியம் அமைக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். கறிக்கோழி வளர்ப்பு சங்க ஒன்றிய நிர்வாகிகள் பஷீர், மாணிக்கம், சிவராஜ், ஜெயபிரகாஷ், ரானா, சிவம், சம்பங்கிராமையா, வெங்கட்ராமையா, முத்து கிருஷ்ணன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தே.பருப்பு விலை 50 ரூபாயை தாண்டியது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,02:45 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் எண்ணெய்க்கு தொடர்ந்து விலை அதிகரித்து வருவதால் தேங்காய் பருப்பு கிலோவுக்கு 50 ரூபாயை தாண்டியுள்ளது. தேங்காய் எண்ணெய்க்கு இரண்டு மாதமாக விலை அதிகரித்து வருகிறது. ஆலைகளில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கிறது. தமிழகத்தில் விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கேரள மாநிலத்தில் இருந்து ஏராளமான வியாபாரிகள் கோபியில் குவிந்துள்ளனர்.மூலப்பொருளான தேங்காய் பருப்புக்கு கூடுதல் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், விலையும் அதிகரித்து வருகிறது.

பருவ மழை துவங்கியுள்ளதால் விவசாயிகளும், இளநீர் உற்பத்திக்கு பதிலாக தேங்காய் பருப்பு உற்பத்தியை அதிகளவில் மேற்கொண்டு வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நடப்பு வாரம் 480 மூட்டைகள் தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோவுக்கு 50.16 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 48.27 ரூபாய்க்கும், சராசரியாக 49 ரூபாய்க்கும் விற்றது. கடந்த வாரத்தை விட நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை அதிகரித்துள்ளது. நடப்பு வாரம் 10 லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் வர்த்தகம் நடந்தது.

**அதிக விலைக்கு உரம் வேளாண் துறை எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,02:44 IST

கோபிசெட்டிபாளையம்: அதிக விலைக்கு உரம் விற்பவர்கள் குறித்து தகவல் தெரிவிக்குமாறு பவானி வேளாண் உதவி இயக்குநர் பாபு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: பவானி வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருவதால், யூரியா உள்ளிட்ட உரங்கள் தேவையான அளவு கையிருப்பு உள்ளது. அரசு நிர்ணயம் செய்துள்ள அதிகபட்ச விலை 276 ரூபாய். இதை விட அதிகமாக விற்பனை செய்வதாக புகார் வந்தது. கவுந்தப்பாடி பகுதியில் நடத்திய சோதனையில், உரங்களின் உரிமம், முதன்மை சான்று, இருப்பு மற்றும் விற்பனை விபரம் சரியில்லாத கடைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உரக்கடையில் உள்ள குறைபாடுகளை விவசாயிகள் உடனடியாக வேளாண் உதவி இயக்குநர் மற்றும் தரக்கட்டுபாடு உதவி இயக்குநருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**பொள்ளாச்சியில் பருத்தி சாகுபடி பரப்பு விவசாயிகளை திணறடிக்கும் ஆள்பற்றாக்குறை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,01:24 IST

பொள்ளாச்சி:பருத்தி சாகுபடியில் முன்னோடி பகுதியாக விளங்கிய பொள்ளாச்சியில், விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் தென்னை விவசாயத்திற்கு மாறினர். தற்போது மானாவாரி விவசாயிகள்பருத்தி சாகுபடியில் கவனம் செலுத்துவதால் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் பருத்தி சாகுபடி பரப்பு அதிகமாக இருந்தது. விவசாய தொழிலாளர்கள் வேறு வேலைகளுக்கு சென்றதால் ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது.பருத்தி, தக்காளி சாகுபடி செய்த விவசாயிகள் தென்னை விவசாயித்திற்கு மாறினர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பு குறைந்து, மானாவாரி பரப்பில் மட்டும் பருத்தி சாகுபடி நடந்தது.

பருத்தி சாகுபடியில் நிறைய சிக்கல் ஏற்பட்டதாலும், விவசாயிகளுக்கு முதலீடு கூட கிடைக்காததால் பாதிக்கப்பட்டனர். இதனால் பருத்தி விவசாயத்தை கைவிட்டு, மாற்று பயிர் சாகுபடிக்கு விவசாயிகள் மாறினர்.இந்நிலையில், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கிணத்துக்கடவு பகுதியில் விவசாயிகள் மீண்டும் மானாவாரியாக பருத்தி சாகுபடியை துவக்கியுள்ளனர். பருத்தி சாகுபடியில் வீரிய ரகத்தை சாகுபடி செய்வதால் அதிக மகசூல் கிடைக்கிறது. பருத்தி விலையும் உயர்ந்து வருவதால், விவசாயிகள் மீண்டும் பருத்தி சாகுபடியில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது:பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு, 500 எக்டர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பருத்தி சாகுபடியை கைவிட்டனர். பருத்தி விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் துறை சார்பில் பண்ணைப்பள்ளி, செயல்விளக்க முகாம், வயல்விழா நடத்தி பருத்தி சாகுபடி தொழில் நுட்பம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.பருத்தி சாகுபடி முறைகள், விதை நேர்த்தி செய்தல், பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி தெரிவிக்கப்படுகிறது. இதனால் தென்மேற்கு பருவ காலத்தில் ஏப்ரல், மே மாதங்களில் மானாவாரி நிலப்பரப்பில் 220 எக்டரில் பருத்தி சாகுபடி செய்துள்ளனர்.தற்போது டிசிஎச் 32 வீரிய ரக பருத்தி, எல்ஆர்ஏ 5166 என்ற நீண்ட இலை பருத்தி ரகம், பிடி ரகமான ஆர்சிஎச் 787 ரக பருத்தியை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இதில் பிடி ரக பருத்தி 150 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.பருத்தியை சாறு உறிஞ்சும் பூச்சி, காய்ப்புழு போன்றவை அதிகம் தாக்கும். பிடி ரக பருத்தி சாகுபடி செய்யும் போது சாறு உறிஞ்சும் பூச்சி மட்டும் தாக்குகிறது; காய்ப்புழு தாக்குவதில்லை. இதனால் மகசூல் அதிகரித்துள்ளது. இரண்டு ஆண்டுக்கு முன்பு பருத்தி சாகுபடி பரப்பு 100 எக்டராக குறைந்திருந்தது. வேளாண் துறையின்

பல்வேறு முயற்சியால் பருத்தி சாகுபடி மீண்டும் துளிர் விட்டுள்ளது.தற்போது, பருத்தி குவிண்டாலுக்கு நான்காயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கிறது. விலையும் கணிசமாக உயர்ந்து வருவதால் விவசாயிகளும் பருத்தி சாகுபடியில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர்.மானாவாரி பரப்பில் பருத்தி சாகுபடி தென்மேற்கு பருவ காலத்தில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடக்கிறது. இதனால், அடுத்த ஆண்டு பருத்தி சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.விவசாயிகள் புலம்பல்கிராமப்பகுதியில் மத்திய அரசின் வேலை உறுதியளிப்பு திட்ட பணிகளில் விவசாய தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதால், விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பருத்தி ஆறு மாத சாகுபடி பயிர் என்பதால், தற்போது காய்கள் வெடித்து பஞ்சு எடுப்பு பணிகள் நடக்கிறது. கிராமத்தில் விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பஞ்சு எடுப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.

**கோவை வேளாண் பல்கலை புராதன சின்னமாக அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,01:23 IST

கோவை:கோவையின் புராதன சின்னமாக வேளாண் பல்கலையின் ஆராய்ச்சிக் கட்டடம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் தமிழ்நாடு வேளாண் பல்கலை நூற்றாண்டு பெருமை வாய்ந்தது, விவசாயத் துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து வரும் இப்பல்கலை தற்போது புராதன சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்திய தேசிய கலை மற்றும் கலாச்சார அறக்கட்டளையின் கோவை கிளை (இன்டாக்) சார்பில் அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. இதற்கான விழா நேற்று நடந்தது. இதில், சான்றிதழை "இன்டாக்' கன்வீனர் ராஜ்குமார் வெளியிட்டார். நினைவுச் சின்ன கல்வெட்டை கோவை மேயர் வெங்கடாசலம் திறந்து வைத்தார். வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: 300 அடி நீளம், 50 அடி உயரம் கொண்ட இக்கட்டடம் 1906ல் கட்டப்பட்டது.

இப்பகுதியில் உருவாக்கிய செங்கல், கிரானைட் கற்களால் 4.70 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டடப்பட்டுள்ளது. வெளியில் இந்திய கலாச்சாரத் தோற்றத்தையும், உள்ளே ஆங்கிலேயர் கால கட்டட வடிவமைப்பையும் கொண்டுள்ளது. கோவைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே இக்கட்டடம் பொக்கிஷம். இந்த அபூர்வ கட்டடம் அழிந்து விடாமல் பாதுகாக்க, பல்கலை நிர்வாகம் பல்வேறு பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டடத்தின் தரைக்கு விரைவில் கிரானைட் கற்கள் பதிக்கப்படும். கூரையும் புதுப்பிக்கப்படும், என்றார். கலெக்டர் உமாநாத் பேசுகையில், ""கோவை வேளாண் பல்கலை கட்டடம் போன்ற புராதன கட்டடங்கள், நமது முன்னோர் கட்டடக் கலையில் சிறந்து விளங்கியதை உணர்த்துகிறது. கட்டடங்கள்தான் ஒரு நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றன. கடந்த பத்து ஆண்டுகளாக புராதன கட்டடங்களை பாதுகாக்க மத்திய அரசு நிறைய நிதி ஒதுக்கி வருகிறது. ஜெர்மனியில் புராதன கட்டடங்களை பாதுகாக்க சட்டமே உள்ளது. நம் நாட்டிலும் அது போன்ற சட்டங்கள் வர வேண்டும்.

அப்போதுதான் அடுத்த தலைமுறைக்கு புராதன கட்டடங்களை பத்திரமாக விட்டுச் செல்ல முடியும்," என்றார். புராதன சின்ன புகழ் பெற்றுள்ள பல்கலையின் ஆராய்ச்சிக் கட்டடத்தை, ஓவியமாக வரையும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. புராதன சின்னம் கிடைத்தது எப்படி?பல்கலையின் மனிதவள மேம்பாட்டுத் துறை பேராசிரியர் சிவா மற்றும் இன்டாக் கன்வீனர் ராஜ்குமார் கூறுகையில், ""பொருளாதாரம், கலாச்சாரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை பிணைப்பதாக கட்டடம் அமைந்துள்ளதாலும், கல்வி, சுற்றுலா, வேலை, கலாச்சாரம், சுற்றுச்சூழல், உணவு பாதுகாப்புக்கு உதவுவதாகவும் அமைந்துள்ளதாலும், பல்கலையின் ஆராய்ச்சிக் கட்டடம் "கோவையின் புராதன சின்னமாக' தேர்வு பெற்றது.இதன் காரணமாகவே ஏர் இந்தியா நிறுவனம், ரயில்வே டைரக்டரி, டெலிபோன் டைரக்டரி ஆகியவற்றில் கோவையை குறிக்க பல்கலை கட்டட படம் இடம் பெற்றுள்ளது," என்றனர்.

**உணவு மானியத்தை அதிகரிக்க கோரி சத்துணவு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,00:20 IST

அன்னூர்: "குழந்தைகளுக்கான சத்துணவு மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்' என்று கோரி சத்துணவு ஊழியர்கள் சங்கம் சார்பில் அன்னூரில் ஆர்ப்பாட்டம் நடந்தது. பணி நீக்கம் செய்யப்பட்ட மாநில தலைவர் பழனிச்சாமி, மாவட்ட தலைவர் இன்னாசிமுத்து உள்ளிட்ட 35 ஊழியர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும். சட்டரீதியான பென்ஷன் வழங்க வேண்டும். குழந்தைகளுக்கான உணவு மானியத்தை இரண்டு ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அன்னூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஒன்றிய தலைவர் தாமோதரசாமி தலைமை வகித்தார்.

மாவட்ட இணை செயலாளர் வெங்கிட சுப்பிரமணியம் பேசுகையில்," ஊழியர்களை "டிஸ்மிஸ்' செய்யும் அரசின் நடவடிக்கையால் போராட்டம் வலுவடையும். சத்துணவு ஊழியர்களை முழுநேர அரசு ஊழியராக்கும் வரை போராட்டம் தொடரும்' என்றார். மாவட்ட துணை தலைவர் வெங்கிட்டான், ஒன்றிய செயலாளர் ரங்கசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**விளைநிலங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் "இண்டிகோ' சாகுபடி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2010,03:11 IST

திருப்பூர்:""சாயக்கழிவு நீரால் பாதிக்கப் பட்டுள்ள விவசாய நிலங்களில், அதிக லாபம் கொடுக்கும் சாயத் தாவரம் (இண்டிகோ) சாகுபடி செய்வது குறித்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது," என தமிழ் நாடு திட்டக்குழு முழுநேர உறுப்பினர் குமாரவேலு தெரிவித்தார்.கடந்த 20 ஆண்டுகளாக,

சாயக்கழிவு நீர் நிலத்துக்குள் சென்றதால் விளைநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. திருப்பூரை சுற்றியுள்ள 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைத்து வந்தது, தற் போது 2,000 ரூபாயாக குறைந்துள்ளது.

திருப்பூரை சுற்றியுள்ள 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங் களில், சாயக்கழிவு நீரால் உப்புத் தன்மை அதிகமாகி விட்டது. இதனால், விவசாய நிலங்கள், வீட்டுமனைகளாகவும், தொழில் நிறுவனங்களாகவும் மாறி வரு கின்றன. புதிய தொழில்நுட்பம் மூலமாக, உப்புத்தன்மையை குறைத்தால் மட்டுமே விவசாயத்தை மீண்டும் உயிரூட்டமுடியும்.
தமிழக அரசின் திட்டக்குழு முழுநேர உறுப்பினர் குமாரவேலு கூறியதாவது:சாயக்கழிவு நீரால் பாதிக்கப் பட்ட விவசாய நிலங்களில், "இண்டிகோ' தாவரங்களை வளர்க்க முடியும். இதற்காக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தாவரத்தில் இருந்து சாயத்தை பிரித்தெடுக்கும் வழிமுறைகள் கண்டறியப் பட்டன. அந்தந்த அரசு அதிகாரி களிடமும் அதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.தரிசாக கிடக்கும் விவசாய நிலங்களில் "இண்டிகோ' பயிரிட் டால், ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெற முடியும். உப்பை தாங்கி வேகமாக வள ரும், சவுக்கு மரங்களை வளர்த் தாலும், ஏக்கருக்கு 10 டன் மரங்களை அறுவடை செய்ய லாம். சாயத்தாவரத்தையும் ஊடுபயிராக வளர்த்தால், கூடுதலாக 20 ஆயிரம் ரூபாய் லாபம் பெற முடியும்.ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால், 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெறலாம். "இண்டிகோ' செடியில் இருந்து 50 கிலோ சாயம் பெறலாம்; சந்தையில் கிலோ 1,000 ரூபாய் வரை விற்பனை செய்ய முடியும்.மேலும், இரண்டு வகையான தாவரங்கள் உப்பு பூமியில் வளரும். புதிய தொழில்நுட்ப முறையில், 25 ஏக்கர் பரப்பள வில் தாவரங்களை வளர்க்கலாம்.

சுமார் இரண்டு ஏக்கர் பரப்பில் இலைகளை ஊற வைத்து சாயம் எடுக்கும் ஆலையை, இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெற முடியும். இந்த ஆலை களில், ஆண்டுக்கு நான்கு டன் எடை அளவுக்கு சாயக்கட்டி களை உற்பத்தி செய்யலாம்.ஒரு சாய ஆலை மூலமாக, 100 ஏக்கரில் பயிரிடப்படும் தாவரங்களில் இருந்து சாயத்தை பிரித்தெடுக்க முடியும். ஆய்வு கள் மூலமாக அனுபவம் பெற்ற நிறுவனங்கள், இத்தாவர சாகு படிக்கு ஒப்புதல் அளித்துள்ளன. தமிழ்நாடு வனத்துறை அதிகாரி கள் மூலமாகவும், மாவட்ட நிர் வாகங்கள் மூல மாகவும் அதற் கான ஆலோசனை கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.ஓரிரு நாட்களில் திருப்பூர் கலெக்டர் தலைமையில் சென்று, சாயத்தாவரங்கள் சாகுபடி குறித்து கள ஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் நடந்த கலெக்டர் கள் மாநாட்டில், துணை முதல்வர் இதற்காக அறிவுறுத்தியதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சாயக்கழிவுநீரால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு, சாயத் தாவரம் சாகுபடி செய்வதன் மூலமாக அதிக லாபம் பெற வழிவகை கண்டறியப்பட் டுள்ளது. மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து, மாசுக்கட்டுப் பாடு வாரியம் ஒப்புதலுடன் அமலாக்கினால், அனைத்து தரப்பு விவசாயிகளும் பயனடைவர்.இவ்வாறு, குமாரவேலு தெரிவித்தார்.

**வெள்ளாடுகள் இனி வேலி தாண்டாது திண்டுக்கல்லில் அழியும் வெள்ளாடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,22:17 IST

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத் தில் வெள்ளாடு வளர்ப் பதை விவசாயிகள் தவிர்த்து வருவது ஆய்வில் தெரிய வந்துள்ளது.
மாவட்டத்தில் நெல், நெசவுக்கு அடுத்தபடியாக ஆடு வளர்த்தல் பிரதான தொழிலாக இருந்தது. ஆயிரக்கணக்கான வெள்ளாடு, செம்மறி ஆடுகள் இங்கு வளர்க்கப்பட்டன. இன்று வெள்ளாடு வளர்ப்பை விவசாயிகள் தவிர்த்துவிட்டனர்.
இன்றைய நிலை:"வேலி தாண்டும் வெள்ளாடுகள்' என்ற பழமொழி கிராமத்தில் உண்டு. இன்று வெள்ளாடு வளர்ப்பு முற்றிலும் குறைந்துவிட்டது. இவற்றிற்கு தேவையான தீவனங்கள் வனப்பகுதியில் அதிகம் கிடைக்கிறது. இன்று பாதுகாப்பு காரணம், பிற வன பயிர்கள் அழிவை தடுக்கும் வகையில் வெள்ளாடுகளை மேய்க்க அனுமதிப்பதில் லை.
பட்டா நிலத்திற்குள் ளும் இவற்றை செல்லவிடுவதில்லை. வெள்ளாடு வளர்த்த விவசாயிகள் பலர் இன்று செம்மறி ஆடு வளர்ப்பிற்கு மாறிவிட்டனர். செம்மறி ஆடு மேய்ச்சலுக்கு கிராமங்களில் போதிய இடம் கிடைக்கிறது. இதனால் வளர்ப்பில் சிரமம் இல்லை என்பது இவர்கள் கருத்து.
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை., இணை பேராசிரியர் பீர்முகமது கூறுகையில், 'வெள்ளாடு வளர்ப்பதற்கு போதிய மேய்ச்சல் நிலம் இங்கில்லை. அதேசமயம் நத்தம், கன்னிவாடி, பழநி பகுதிகளில் செம்மறி ஆடுகள் வளர்க்க மேய்ச்சல் நிலம் அதிகம் உள்ளது. உரிய முறைப்படி வளர்த்தால் அதிக கறி பெற முடியும். கூடுதல் விலையும் கிடைக்கும்,'என்றார்.

**காய்கறி வரத்து அதிகரிப்பு : குறைந்தது விலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,22:03 IST

சிவகங்கை : கொடைக்கானலில் இருந்து காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், சிவகங்கை வாரச்சந்தையில் விலை குறைந்தது.
நேற்றைய விலை நிலவரம் (கிலோ): கடந்த வாரம் 20 க்கு விற்ற கத்தரிக்காய்- 15; 24க்கு விற்ற பாகற்காய்- 20; 36க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 30; 24 க்கு விற்ற கேரட் -20; முள்ளங்கி- 16; 20 க்கு விற்ற உருளை கிழங்கு- 18; முட்டை கோஸ்- 15; 40 க்கு விற்ற கருணை கிழங்கு- 30; 40 க்கு விற்ற இஞ்சி- 30; 40க்கு விற்ற அவரைக்காய்- 30; 60 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 40; வெங்காயம்- 15- பெல்லாரி- 18; 20 க்கு விற்ற பச்சை மிளகாய்- 16; 24 க்கு விற்ற பீட்ரூட்- 15; நூக்கல் -20; 40 க்கு விற்ற சோயா பீன்ஸ்- 30; எலுமிச்சை- 25;

பழங்கள்: ஆப்பிள்- 40, இரண்டாவது ரகம் 30; ஆரஞ்சு- 60; சப்போட்டா- 16; திராட்சை வெள்ளை- 50, கறுப்பு-40; அன்னாசி பழம்- 20; மாதுளை- 60; இரண்டாவது ரகம்- 40 ரூபாய்.

தினத் தந்தி

## *மத்திய திட்டக் குழு தகவல்: நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் வேளாண் துறை 5 சதவீதம் வளர்ச்சி அடையும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர், நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் வேளாண் துறை 5–6 சதவீதம் வளர்ச்சி அடையும் என்று கூறினார். இதனையடுத்து, திட்டக்குழுவின் முந்தைய மதிப்பீட்டுக்கு இணையாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*மொத்த உள்நாட்டு உற்பத்தி*

*பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் துறையின் பங்களிப்பு தற்போது 17 சதவீதமாக உள்ளது. மேலும் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 60 சதவீதத்தினர் விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில்தான் ஈடுபட்டுள்ளனர். சென்ற நிதி ஆண்டில், இத்துறை 0.2 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது. நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் (2007–2012), முதல் மூன்று ஆண்டுகளில் விவசாய துறையின் சராசரி வளர்ச்சி 2.2*

சதவீதமாக உள்ளது.

ஐந்தாண்டு திட்ட காலம்

பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், நம் நாட்டில் வேளாண் துறை 3 முதல் 3.5 சதவீதம் வரை வளர்ச்சி அடையும் என மத்திய திட்டக் குழு மதிப்பீடு செய்துள்ளது. முன்னர், 4 சதவீத வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. முந்தைய மதிப்பீட்டை காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறையும் என்ற நிலைப்பாடு உள்ள போதிலும், பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தைக் காட்டிலும், வளர்ச்சி விகிதம் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய துறையின் வளர்ச்சி 3–3.5 சதவீத அளவிற்கே இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) 4 சதவீத வளர்ச்சியை அடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய திட்டக் குழு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது.

சென்ற ஆண்டில் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் நாட்டின் பல பகுதிகள் வறட்சிக்கு இலக்காயின. இதனால், அதற்கு முந்தைய 32 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. எனினும் நடப்பு 2010–11–ஆம் ஆண்டு வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) வேளாண் உற்பத்தி அமோகமாக வளர்ச்சி அடையும் நிலை உருவாகி உள்ளது.

நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது. மேலும், நாட்டின் பல பகுதிகளில் பருவமழை போதிய அளவு பெய்துள்ளது. இதனையடுத்து, நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என்று மத்திய உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி 23.45 கோடி டன் என்ற அளவில் அமோகமாக இருந்தது. சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன் – அக்டோபர்), நாட்டின் பல பகுதிகளில் வறட்சி நிலவியது. இதனால், சென்ற 2009–10–ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 7 சதவீதம் சரிவடைந்து 21.82 கோடி டன்னாக குறைந்தது. எனினும் நடப்பு ஆண்டு பருவங்களில் உற்பத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரிக்கும் என அண்மைக் கால மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

அன்னிய நேரடி முதலீடு

அன்னிய நேரடி முதலீட்டுக்கான இரண்டாவது பெரிய மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது. எனினும் நடப்பு 2010 காலண்டர் ஆண்டில், ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலத்தில், அன்னிய நேரடி முதலீடு 1,078 கோடி டாலராக

*(சுமார் ரூ.49,600 கோடி) சரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டை விட 18 சதவீதம் குறைவாகும். ஜனவரி மாதத்தில் மட்டும் இவ்வகை முதலீட்டில் 25 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது.*

*அன்னிய நேரடி முதலீடு சரிவடைந்து வருவது பற்றி கருத்து தெரிவித்த அலுவாலியா, "சென்ற ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடும்போது, நடப்பாண்டில் அன்னிய நேரடி முதலீடு 49 சதவீதம் குறைந்துள்ளது. ஏப்ரல்–ஜூலை மாத காலத்திலும் 27 சதவீதம் சரிவடைந்துள்ளது கடந்த சில மாதங்களில் அன்னிய முதலீடுகள் குறைந்து போயுள்ளது குறித்து கவலை கொள்ள வேண்டாம். ஒட்டுமொத்தத்தில் நம் நாட்டில் அன்னிய நேரடி முதலீட்டிற்கான தொழில் சூழல் மிகவும் சாதகமாகவே உள்ளது" என்று தெரிவித்தார்.*

*சி.எம்.ஐ.இ.*

*நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக இருக்கும் என திட்டக் குழு தெரிவித்துள்ள நிலையில், இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சி.எம்.ஐ.இ) வளர்ச்சி விகிதம் 9.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக இருந்தது.*

*சி.எம்.ஐ.இ. அமைப்பு, சென்ற மார்ச் மாதத்திலிருந்து நாட்டின் வளர்ச்சி விகிதம் 9.2 சதவீதமாக இருக்கும் என தொடர்ந்து கூறி வருகிறது. வேளாண் துறை, தொழில்துறை மற்றும் சேவைகள் துறைகளின் செயல்திறன் அடிப்படையில் இவ்வாறு மதிப்பீடு செய்துள்ளது.*

*நடப்பு நிதி ஆண்டில், கட்டுமானம் உள்ளிட்ட தொழில்துறையின் வளர்ச்சி 9.4 சதவீதமாகவும், சேவைகள் துறை 10 சதவீதமாகவும் வேளாண் துறை 5.7 சதவீதமாகவும் வளர்ச்சி அடையும் என சி.எம்.ஐ.இ. தெரிவித்துள்ளது. சென்ற நிதி ஆண்டில் 7 சதவீதம் குறைந்திருந்த உணவு தானியங்கள் உற்பத்தி, நடப்பாண்டில் 5.2 சதவீதம் அதிகரிக்கும் என்றும் முன்னறிவிப்பு செய்துள்ளது.*

## இலவச பம்பு செட் வழங்கும் திட்டத்தில் சிறு, குறு நிறுவனங்களுக்கு 75 சதவீத உற்பத்தி ஆர்டர் வழங்க வேண்டும் கோப்மா சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை

*கோவை,செப்.23–*

*இலவச பம்பு செட் வழங்கும் திட்டத்தில், சிறு, குறு நிறுவனங்களுக்கு 75 சதவீத உற்பத்தி ஆர்டர் வழங்க வேண்டும் என்று கோப்மா சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து உள்ளது.*

இது குறித்து கோவையில் கோப்மா சங்க தலைவர் கே.மணிராஜ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது:–

இலவச பம்பு செட் திட்டம்

இலவச பம்பு செட் திட்டத்தில் தமிழகத்தில் இயங்கி வரும் பம்பு செட் கம்பெனிகளுக்கு குறிப்பாக சிறு, குறு பம்பு செட் செய்வோர்களுக்கு தமிழக அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். இலவச பம்பு செட் திட்டத்தில் வழங்கப்படும் பம்பு செட்டுக்கு உடனடியாக சிறப்பு நிதியை ஒதுக்கி அரசு பணப்பட்டுவாடா முறையை துரிதப்படுத்த வேண்டும். சிறு, குறு பம்பு செட் உற்பத்தியாளர்கள் அனைவரும் இந்த திட்டத்தில் பங்கேற்று பயன் அடையும் வகையில் அரசாங்க விதிகளை எளிமைப்படுத்த வேண்டும்.

கோவையில் குறைந்த முதலீட்டில் ஆனால் அதிக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தருகின்ற சிறு, குறுந்தொழிலான பம்பு செட் தொழில் செய்வோர் அனைவரும் ஐ.எஸ்.ஐ. முத்திரை வாங்குவதற்கு ஏற்படுகின்ற தொகையில் 90 சதவீதத்தை, தமிழக அரசின் கீழ் இயங்குகின்ற கூட்டுறவு வங்கி மற்றும் டிக், மற்றும் டி.ஆர்.டி.ஏ அல்லது சம்பந்தப்பட்ட அரசு நிறுவனம் மூலமாக சொத்து பிணையம் ஏதும் இல்லாமல் குறைந்த வட்டியில் மானியக் கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.மார்க்

ஐ.எஸ்.ஐ. இல்லாத மோட்டார் பம்பு செட்டின் மேல் மத்திய அரசு விதித்த 4 சதவீத சென்வாட் வரியை நீக்க தமிழக அரசு உதவ வேண்டும். இந்தியா முழுவதும் கிளைகளை ஏற்படுத்தி கோடிக்கணக்கில் வியாபாரம் செய்துவரும் கம்பெனிகள் பெற்றிருக்கும் பம்பு செட்டுக்கான நட்சத்திர குறியீட்டை ஏழை விவசாயிகளுக்கான இலவச பம்பு செட் திட்டத்தில் சிறிய கம்பெனிகளுக்கு கட்டாயப்படுத்தாமல் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் ஐ.எஸ்.ஐ. மார்க் என்பதையே அரசு உறுதிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அரசின் இந்த திட்டத்தில் பெரிய கம்பெனிகள் முழு பயன் அடைய நேரிடும். பெரிய நிறுவனங்கள் சிறிய அளவில் தொழில் செய்வோரை அழிக்க நினைக்கும் அவலத்துக்கு அரசே துணைபோக கூடாது.

குழு ஏற்படுத்த வேண்டும்

ஆகவே தமிழக அரசின் இலவச பம்பு செட் வழங்கும் திட்டத்தில் 75 சதவீத உற்பத்தி ஆர்டரை சிறு, குறு நிறுவனங்களுக்கே ஒதுக்கி தரவேண்டும். ஏற்கனவே அரசின் இலவச பம்பு செட் அறிவிப்பு வெளியானவுடன் கிட்ட தட்ட 40 சதவீதம் சிறிய அளவில் பம்பு செட் செய்வோருக்கு ஆர்டர் குறைந்து விட்டது. ஆகவே இந்த திட்டத்திலாவது சிறிய கம்பெனிகள் பயன்பெற அரசு உதவி செய்ய வேண்டும். இந்தியாவில் மொத்தம் உற்பத்தியாகும் அனைத்து வகையான பம்பு செட்டுகளில்

*கோவையில் மட்டும் 65 சதவீதம் உற்பத்தியாகிறது. ஆகவே கோவையில் பம்பு செட் உற்பத்தி செய்வோருக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் பம்பு செட் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மாவட்ட கலெக்டர் தலைமையில் அரசு அதிகாரிகள் இணைந்த ஒரு குழுவை உடனடியாக தமிழக அரசு ஏற்படுத்தி தர வேண்டும்.*
*இவ்வாறு அவர் கூறினார்.*

## வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் தென் மண்டல வேளாண் கண்காட்சி 30–ந் தேதி தொடங்குகிறது

*கோவை, செப்.23–*
*கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் தென்மண்டல அளவிலான வேளாண் கண்காட்சி வருகிற 30–ந் தேதி நடக்கிறது. இந்த கண்காட்சியை வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தொடங்கி வைக்கிறார்.*
*இது தொடர்பாக வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–*
*வேளாண் கண்காட்சி*
*மத்திய அரசின் வேளாண் அமைச்சகம் ஆண்டுதோறும் மாநில வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக விவசாயிகள் பயன் பெறும் வகையில் வேளாண் கருத்து கண்காட்சியை நடத்தி வருகிறது.*
*அதன்படி கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் தென் மண்டல அளவிலான வேளாண் கருத்து கண்காட்சி அவினாசி ரோட்டில் உள்ள கொடிசியா வணிக வளாகத்தில் வருகிற 30–ந் தேதி முதல் அடுத்த மாதம் (அக்டோபர்) 4–ந் தேதி வரை நடக்கிறது.*
*நான்கு நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியை தமிழக அரசின் வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தொடங்கிவைக்கிறார். உலக மயமாக்குதலில் சந்தை வழி வேளாண்மை என்ற தலைப்பில் நடைபெறும் இந்த கண்காட்சியில் மத்திய, மாநில வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், விரிவாக்க துறை, நிதி நிறுவனங்கள், களிர் சுய உதவி குழுக்கள் மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர் ஆகியோர் பங்கேற்கின்றனர். இதற்காக 200–க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.*

நவீன தொழில் நுட்பம்

கண்காட்சியின் ஒரு பகுதியாக தொழில்நுட்ப கருத்தரங்கு நடக்கிறது. இதில் பல்வேறு அறிஞர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மையில் உள்ள நவீன தொழில்நுட்பம் குறித்து விளக்கி கூறுகின்றனர்.

மேலும் பண்ணை எந்திர கருவிகளான நெல், கரும்பு அறுவடை எந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான புதிய எந்திரங்களின் செயல்பாடுகள் குறித்த விளக்கம் அளிக்கப்படுகிறது. இதே போல் பண்ணை தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களான புதுச்சேரி, லட்சத்தீவு மற்றும் அந்தமான் நிக்கோபார் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## கூடலூரில் அதிக லாபத்தை எதிர்பார்த்து மஞ்சள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்



கூடலூர் தொரப்பள்ளியில் பயிரிட்டுள்ள மஞ்சள் செடிகளுக்கு விவசாயிகள் உரம் இடுவதை படத்தில் காணலாம்.

கூடலூர்,செப்.23–

அதிக லாபத்தை எதிர்பார்த்து மஞ்சள் பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் ஆர்வம் செலுத்த தொடங்கி உள்ளனர்.

போதிய விலை இல்லை

நீலகிரி தேயிலைக்கு போதிய விலை கிடைக்காத நிலை நீடித்து வருகிறது. இதனால்

*மாற்று பயிர்களை நடுவதில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். பசுந் தேயிலைக்கு விலை கிடைக் காததால் கூடலூர் பகுதியில் உள்ள சிறு தேயிலை தோட்டங் கள் பராமரிப்பின்றி விடப் பட்டுள்ளன. மேலும் தேயிலை தோட்ட தொழி லாளர் களும் வேறு தொழிலை தேடி இடம் பெயர்ந்து வருகின்றனர்.*

*இந்த நிலையில் கூடலூர் பகுதி விவசாயிகள் தேயி லைக்கு மாற்றாக சமவெளி பிரதேச காய்கறிகளை விளைவிப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். கூடலூர் பகுதியில் காபி, ஏலக்காய், குறுமிளகு, இஞ்சி, கிராம்பு உள்ளிட்ட பணப் பயிர்கள் ஏக்கர் கணக்கில் விளைவிக்கப்படுகின்றன. இதேபோல் ஸ்ரீமதுரை, தொரப்பள்ளி, மரப்பாலம், புளியாம்பாறை, பாடந் தொரை, தேவர்சோலை ஆகிய பகுதிகளில் கத்தரிக்காய், மிளகாய், பீன்ஸ், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகள் விளை விக்கப்படுகின்றன.*

*அதிக லாபத்தை எதிர்பார்த்து*

*கர்நாடக மாநிலம் மைசூர், குண்டல்பேட் பகுதியிலும், தமிழகத்தின் ஈரோடு, சேலம் பகுதியிலும் ஏக்கர் கணக்கில் மஞ்சள் விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால் கூடலூர் பகுதியில் மஞ்சள் விவசாயம் போதிய அளவு இல்லாமல் இருந்து வந்தது. தற்போது மஞ்சள் பயிரிடுவதில் கூடலூர் தொரப்பள்ளி விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.*

*கடந்த ஆண்டு 1 கிலோ மஞ்சள் ரூ.35 வரை விலை போனது. அதேபோல் இந்த ஆண்டும் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் கூடலூர் தொரப்பள்ளி பகுதி விவ சாயிகள் மஞ்சள் பயிரிட் டுள்ளனர். இஞ்சியை போல் 1 வருடம் மஞ்சள் செடியும் வளரும் தன்மை கொண்டவை. தற்போது குண்டல்பேட் பகுதியில் இருந்து மஞ்சள் கொண்டு வரப்படுகின்றன.*

*மஞ்சள் பயிரில் கவனம் செலுத்தும் விவசாயிகள்*

*இனி வரும் காலங்களில் மஞ்சள் விளைச்சல் அதிகரித்து நல்ல விலையும் கிடைத்தால் கூடலூர் விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் மஞ்சள் பயிரில் கவனம் செலுத்து வர். இது குறித்து கூடலூர் தொரப்பள்ளி விவசாயி ஒருவர் கூறும் போது, கடந்த ஆண்டு மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்தது. ஆகையால் இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என எண்ணி மஞ்சள் பயிரிட்டுள்ளேன். விளை யக்கூடிய மஞ்சளை கூடலூர் மற்றும் ஆயுர்வேத கடைகளுக் கும் விற்பனை செய்து வருகி றேன். நல்ல விலை கிடைத்தால் மற்ற விவசாயிகளும் மஞ்சள் மீது ஆர்வத்தை செலுத்த தொடங்கி விடுவர் என்று கூறினார்.*

குன்னூர் பகுதி கிராமங்களில்

# தேயிலை, காய்கறி பயிர்களை நாசப்படுத்தும் காட்டெருமைகள்

குன்னூர், செப்.23-

குன்னூர் பகுதி கிராமங் களில் தேயிலை, காய்கறி பயிர்களை காட்டெரு மைகள் நாசப்படுத்தி வருகின்றன.

### மகசூல்

குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் தேயிலை தோட்டங்கள் மற்றும் காய்கறிகள் தோட்டங் கள் உள்ளன. தற்போது பெய்து வரும் மழையினால் நன்கு மகசூல் கிடைக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

தேயிலையை பொறுத்த வரை 'ஏ' கிரேடு, 'பி' கிரேடு போன்ற கிரேடு பச்சை தேயிலைக்கு அதிக விலை கிடைத்து வருகிறது. இதனால் தேயிலை விவசாயிகள் தோட்டத்தில் உள்ள தேயிலை செடிகளை நன்கு பராமரித்து வரு கின்றனர். தற்போது பெய்து வரும் மழையைபயன்படுத்தி உரமிட்டதால், தேயிலை செடிகளில் சிறிய அரும்புகள் பிடித்துள்ளன. அதே போல் விவசாயிகள் பயிரிட்டுள்ள மலைத்தோட்ட காய்கறிகளான கேரட், பீட்ரூட், காளிபிளவர், முட்டைகோஸ் உள்பட காய்கறி செடிகள் நன்கு முளைத்துள்ளன.



### தடுப்பு சுவர்கள்

தேயிலை தோட்டங்கள், காய்கறி தோட்டங்களுக்கு அருகே உள்ள காடுகளில் காட்டெருமைகள் காணப்படுகின்றன. காடுகளில் போதிய உணவு கிடைக்காத காரணத்தால் காட்டெருமை கள் தேயிலை தோட்டங்களுக்குள்ளும், காய்கறி தோட்டங்களுக்குள் புகுந்து மேய தொடங்குகின்றன.

காட்டெருமைகள் மாலை, இரவு நேரங்களில் தோட்டங்களில் புகுந்து விடுகின்றன. தேயிலை தோட்டத்தை பொறுத்த வரை சரிவான நிலப்பரப்பில் அமைந்துள்ளதால், அவற்றின் கால் தடம் நிலத்தில் ஆழமாக பதிந்து விடுகிறது. மேலும் தேயிலை தோட்டங்களில் மண் சரிவு ஏற்படாத வகையில் கற்களை கொண்டு தடுப்பு சுவர்கள் அமைக்கப் பட்டுள்ளன.

### மண்சரிவு அபாயம்

காட்டெருமைகள் இந்த தடுப்பு சுவரை இடித்து விடு கின்றன. இதனால் மண் சரிவு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது. மேலும் தடுப்பு சுவரில் அமைக்கப்பட்ட கற்கள் செடிகள் மீது விழுவ தால், தேயிலை செடிகள் சேதம் அடைகின்றன. பெரிய கற்கள் விழுந்தால் வேருடன் செடி சாய்ந்து விடுகிறது. இதனால் தேயிலை விவசாயிகள் பாதிப்படைந்து வருகிறார்கள். தற்போது காட்டெருமைகள் வரும் வழியில் கம்பிகள் கட்டி அதை தடை செய்துள்ளனர்.

மேலும் காய்கறி தோட்டங்களில் புகும் காட்டெருமைகள் காய்கறி செடிகளை மிதித்து நாசம் செய்துவிடுகின்றன. இதனால் காய்கறி விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். பெரும்பாலும் இந்த காட் டெருமைகள் குன்னூர் அருகே உள்ள பெள்ளட்டி மட்டம், எடப்பள்ளி, வண்டிசோலை போன்ற கிராமங்களில் உள்ள தோட்டங்களிலேயே நாசம் செய்து வருகின்றது. இதற்கு வனத்துறையினர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வேளாண்மை செய்திகள்

# அதிக லாபம் தரும் செடி முருங்கை சாகுபடி

## சாதனை படைத்துவரும் சின்னதாராபுரம் விவசாயிகள்



கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் பகுதியில் அதிக அளவில் முருங்கை சாகுபடி நடைபெற்று வருகிறது. முருங்கை பயிர்தான் இந்த பகுதியின் முக்கிய வருவாய் கொடுக்கும் தொழிலாகும். தற்போது அதை விட அதிக மகசூல் தரும் செடி முருங்கையின் சாகுபடி அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

இந்த செடி முருங்கை சாகுபடி குறித்து இந்த பகுதியின் விவசாயிகள் கூறியதாவது:-

### கார்த்திகை பட்டம்

நல்ல செழிப்பான செம்மண் நிலத்தில் ஒரு ஏக்கரில் கரும்பு, அரை ஏக்கரில் கார்த்திகை பட்டத்தில் செடி முருங்கை பயிர்செய்தோம். இதற்கான நிலத்தை தேர்வு செய்தவுடன் 2 டன் தொழு உரம், 1 டன் கோழிக் குப்பை ஆகியவற்றைகொட்டி இறைத்தோம். அதன் பின்னர் 2 முறை உழவு மேற்கொண்டோம். இதற்காக 5 அடி இடைவெளியில் சொட்டுநீர் பாசனம் ஏற்படுத்தினோம். செடிக்கு செடி 6 அடி மற்றும் 10 அடி இடைவெளி இருக்குமாறு மண்வெட்டியால் நிலத்தைலேசாக சுரண்டி அதில் செடி முருங்கை வைத்து மண்ணை கொண்டு மூடினோம்.

பயிர் செய்த 8-ம் நாள் விதைகள் தனித் தனியாக முளைத்து வந்தது. அந்த சமயத்தில் விதைகள் முளைக்காமல் இருந்தால் தனியாக பராமரித்து வரும் நாற்றுகளில் இருந்து எடுத்து நடவுசெய்தோம். இந்த விதைகள் முளைத்து வரும் வரை அதிக அளவு நீர் பாய்ச்சினோம். அதை தொடர்ந்து வாரம் 2 முறை நீர் பாய்ச்சினோம். 20 நாட்களுக்கு பின்னர் செடி அரை அடி உயரம் வளர்ந்து இருந்தது. பக்கவாட்டில் கிளை முளைத்து செடிகள் தழைத்து வளருவதற்காக நேராக முளைத்த கொழுந்தை கிள்ளி விட்டோம். இதே போல் 30 நாட்களுக்கு பின்னர் ஒரு தடவை முளைத்த கொழுந்தை கிள்ளினோம். செடி நன்கு வளர்வதற்காக அதை சுற்றி இருந்த களைகளை எடுத்தோம். செடிகள் அதிக உயரம் வளராமல் இருக்க கவாத்து செய்தோம்.

### வாரம் ஒரு முறை

இயற்கை விவசாயம் என்பதால் நான் கணக்கில் உரங்களை வைக்க வில்லை. செடியில் ஏதாவது ஊட்டச்சத்து குறைந்தால் மட்டுமே தொழு உரம் அல்லது கோழிக் குப்பைவைத்தோம். இதை தொடர்ந்து மாட்டு மூத்திரத்தை சொட்டுநீரோடு கலந்தும் இட்டோம். இதன் பின்னர் காய்கள் நல்ல பச்சை நிறத்தில் காய்த்து இருந்தது.

செடி முருங்கையில் உள்ள இலைகள் மஞ்சள் நிறத்துக்கு மாறிய போது அதை பிடுங்கி எறிந்து விட்டு 300 மில்லி பஞ்சகவ்யத்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகள் மீது தெளித்தோம். 90 நாட்களுக்கு மேல் பூ எடுத்து, 120 நாட்களுக்கு மேல் அறுவடைக்கு தயாரானது. செடிகளில் உள்ள காய்களின் வளர்ச்சியை பொறுத்து வாரம் ஒரு முறை அல்லது 2 முறை காய்களை பறிக்க முடிந்தது. ஆனால் காய்கள் முற்றுவதற்கு முன்னர் அறுவடை மேற்கொண்டோம்.

### கவாத்து-மகசூல்

தொடர்ந்து கவாத்து மட்டும் செய்து தேவைப்படும் போது மட்டும் ஊட்டச்சத்து கொடுத்துவந்தோம். இதன் காரணமாக 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து அறுவடை கிடைத்தது. ஆரம்பத்தில் ஒரு அறுவடைக்கு 100 முதல் 150 கிலோ வரை காய்கள் கிடைத்தது. அதிக பனிப்பொழிவு, மற்றும் அடை மழை காலங்களைத் தவிர ஆண்டு முழுவதும் காய் வரத்து இருந்தது.

முதல் ஆண்டில் மட்டும் 8 டன் மகசூல் கிடைத்தது. அடுத்த 2 ஆண்டுகளில் தலா 10 டன்னுக்கு மேல் மகசூல் கிடைத்தது. அருகில் உள்ள மூலனூர் சந்தைக்கு காய்களை ஒரு கட்டுக்கு 25 காய்கள் என்ற அளவில் கொண்டு சென்று விற்று வருகிறோம். கடந்த ஜூன் மாதத்தில் ஒரு கட்டு முருங்கை காய் ரூ.100 வரை விற்பனையானது. வழக்கமாக முகூர்த்தநாள், பண்டிகை நாட்களை ஒட்டி முருங்கைகாய்க்கு நல்ல விலை கிடைக்கும். மற்ற நாட்களில் விலை குறைவாக இருந்தது. எப்படி இருப்பினும் கிலோ ஒன்றுக்கு ரூ.15 கிடைத்து வருகிறது.

இவ்வாறு விவசாயிகள் கூறினார்கள்.

# சர்க்கரைநோயை கட்டுப்படுத்தும் 'வெந்தயம்'

## சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்கு ஆலோசனை

ரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவு அதிகரிப்பதன் விளைவாக மனித உடலில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்த நோயை கட்டுப்படுத்தும் மருந்தாக நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்தும் வெந்தயம் பயன்படுகிறது. இதற்காக ஐதராபாத்தில் உள்ள தேசிய ஊட்டச்சத்து மையம் ஆய்வு செய்து உள்ளது.

### வெந்தயம்

*பொதுவாக வெந்தயம் என்பது உணவின் ருசிக்கு பயன்படுத்துகிறது. இதில் உள்ள 50 சதவீதம் நார்ச்சத்து சர்க்கரை நோயாளிகளின் ரத்தம் மற்றும் சிறுநீரில் உள்ள சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவை கட்டுப்படுத்தி குறைக்கிறது. ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை பொறுத்து 25 முதல் 50 கிராம் வரை பயன்படுத்தலாம்.

*ஆரம்பகாலத்தில் 25 கிராம் வெந்தயத்தை சரிபாதியாக பிரித்து காலை மற்றும் இரவு உணவுடன் பயன்படுத்தலாம். இரவு முழுவதும் ஊற வைத்தோ அல்லது பொடிப்பொடியாக இடித்து தண்ணீர் மற்றும் மோரில் கலந்து உணவுக்கு 15 நிமிடங்களுக்கு முன் குடிக்க வேண்டும்.

*வெந்தயத்தின் கசப்பு சுவையை குறைக்க ஊறவைக்கப்பட்ட விதைகளை தோசை, சப்பாத்தி, இட்லி, உப்புமா, தயிர், பருப்பு மற்றும் காய்கறி கூட்டு ஆகியவற்றுடன் சமைத்து பயன்படுத்தலாம்.

### சாகுபடி

*வெந்தயத்தை பயன்படுத்துவதுடன் நாள்தோறும் உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். உடல் எடையை குறைப்பதன் மூலம் உடலில் உள்ள ஹார்மோன்களின் செயல்பாடுகளை அதிகரிக்க முடியும். உடலுக்கு அதிக கலோரிகளை அளிக்கும் கொழுப்பு உணவுகளை குறைத்து கொள்ள வேண்டும்.

*சர்க்கரையை கட்டுப்படுத்த வெந்தயத்தை பயன்படுத்துவதுடன் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைகள் மற்றும் மருந்துகளை பயன்படுத்த வேண்டும். வெந்தயம் உத்திரபிரதேசம், மராட்டியம் போன்ற மாநிலங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

*தமிழ்நாட்டை பொறுத்தவரை தேவைக்காக மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. தேவைக்காக மட்டுமின்றி மருத்துவ பயன்களுக்காகவும் விவசாயிகள் வெந்தயத்தை சாகுபடி செய்ய வேண்டியது அவசியம்.

-தகவல்: அகமது கபீர், வேளாண் நிபுணர், தாராபுரம்.

# வேளாண்மை- கேள்விபதில்

கேள்வி: நாட்டுக் கோழி இனங்களில் அதிக முட்டையிடும் கோழி இனம் எது?

**சுந்தர், பல்லடம்.**

பதில்: நாட்டுக்கோழி இனங்களில் பொதுவாக அனைத்து கோழி இனங்களும் சராசரியாக முட்டையிட்டு அடைகாக்கும் திறன் பெற்றவை தான் என்றாலும், சாம்பல்நிற இறகுகள் கொண்ட கோழிகள் சற்று கூடுதலாக முட்டையிடும் ரகம் என்று கூறப்படுவதுண்டு. இது தவிர கழுத்தில் இறகுகள் இல்லாத ஒரு ரக கோழிகளும் முட்டையிடுவதிலும் அடைகாப்பதிலும் கூடுதல் திறன் படைத்தவை என்றும் சொல்லப்படுவதுண்டு. ஆனால் நாட்டுக் கோழிகள் என்றாலும் பண்ணை முறையில் வளர்க்கும் போது இன்குபேட்டர் மூலம் சீராக அடைகாத்து குஞ்சுகளை எடுத்து பண்ணையில் எண்ணிக்கையை உயர்த்துவது நல்லது.

கேள்வி: தற்போது மழைக்காலம் தொடங்கியிருக்கிறது. இப்போது எனது வளர்ப்பு பிராணிகளுக்கு நோய்தடுப்பு மருந்தாக எதைப்பயன்படுத்தலாம். அதாவது காலநிலை மாற்றத்தால் பாதிப்புக்கள் ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம்?

**ஜெகதீஷ்,கோவை.**

பதில்: ஒமியோபதி மருத்துவ துறையில் சிறந்த திரவ வடிவிலான மருந்துகள் உள்ளன. தரமான மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்று இந்த மருந்தை தயாரித்து வருகிறது. இதனை குடிநீரில் கலந்து தரலாம். இந்த மருந்துகள் குளிர், கோடை காலத்தில் வளர்ப்பு பறவைகள், விலங்குகளுக்கு வரும் நோய்களை தடுப்பதுடன், ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உறுதியளிக்கின்றன. இந்த மருந்து விலங்குகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி பருவகால மாறுதலால் உடலில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப வலிவைத் தருவதுடன் பருவகால நோய்களை வரவிடாமல் தடுக்கின்றன. இந்த மருந்தை பயன்படுத்தி பார்த்த பண்ணையாளர்கள் வியக்கத்தக்க அளவில் மருந்துகளுக்கான செலவினத்தை மிச்சப்படுத்தியுள்ளனர் என்பது கண்கூடு. இதில் பக்க விளைவுகள் எதுவும் இல்லை என்பது சிறப்பம்சம்.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி, கோவை-18**

